

கோயம்புத்தூர் மாவட்ட மாநகராட்சி ஆர்.எஸ்.புரம் கலையரங்கத்தில் (6.9.2024) அன்று தொடுவானம் எனும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான தொழில் மற்றும் உயர்கல்வி பயிலகம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்தார். இதில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் ச.அண்ணாதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், தாட்கோ பொது மேலாளர் என்.ஸ்ரீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

### குடும்ப அட்டைகளின் மூலம்

# தருமபுரி மாவட்டத்தில் 15,37,765 நபர்கள் பயனடைந்து வருகின்றனர்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

தருமபுரி, செப். 8 -

தருமபுரி மாவட்டம், அரசு கலைக்கல்லூரி கலையரங்கத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 1454 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் மற்றும் ஊரக பகுதிகளில் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்களில் கோரிக்கை மனுக்கள் வழங்கிய 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது :-

தருமபுரி மாவட்டத்தில் 508 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 587 பகுதிநேர நியாய விலைக் கடைகள் என மொத்தம் 1095 நியாய விலைக் கடைகளும், 118 நடமாடும் நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் 2,43,085 முன்னுரிமையுள்ள மின்னணு குடும்ப அட்டை வகைகளும் (PHH Card), 1,70,881 முன்னுரிமையற்ற மின்னணு குடும்ப அட்டை வகைகளும் (NPHH Card), 54,456 AAY அரிசி அட்டை வகைகளும் (AAY Card), 737 சர்க்கரை அட்டை வகைகளும் (Sugar Card), 1526 காவலர் குடும்ப அட்டை வகைகளும் (Police / Forest Card), 178 பண்டகமில்லா குடும்ப அட்டை வகைகளும் (Non Card), 10,321 OAP குடும்ப அட்டை வகைகளும், 287 ANP குடும்ப அட்டை வகைகளும், 733 இலங்கை தமிழர்கள் குடும்ப அட்டை வகைகள் என மொத்தம் 4,68,422 குடும்ப அட்டைகள் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் 01.06.2023 முதல் 30.06.2024 வரை புதிய மின்னணு குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பம் செய்த 5166 மனுதாரர்களில் முதற்கட்டமாக விசாரணை மேற்கொண்டு தருமபுரி வட்டத்தில் 292 குடும்ப அட்டைகளும், நல்லம்பள்ளி வட்டத்தில் 199 குடும்ப அட்டைகளும், அரூர் வட்டத்தில் 156 குடும்ப அட்டைகளும், பென்னாகரம் வட்டத்தில் 185 குடும்ப அட்டைகளும், அரூர் வட்டத்தில் 156 குடும்ப அட்டைகளும், பென்னாகரம் வட்டத்தில் 185 காரிமங்கலம் வட்டத்தில் 268 குடும்ப அட்டைகளும், பாலக்கோடு வட்டத்தில் 130 குடும்ப அட்டைகளும், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் 224 குடும்ப அட்டைகள் என மொத்தம் தகுதியுள்ள 1454 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கபட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தில் 5235 NPHH குடும்ப அட்டைகளை தணிக்கை மேற்கொண்டு அதில் தகுதியான 764 குடும்ப அட்டைகளை PHH குடும்ப அட்டைகளாக வகைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. விற்பனை முனைய இயந்திரம் (POS Machine) ஆகஸ்ட் 2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விரல் ரேகை பதிவு (Biometric முறை) செப்டம்பர் 2020 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 5 கிடங்குகள் (தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், கடத்தூர் மற்றும் அரூர்) மூலமாக அனைத்து பொதுவிநியோகத்திட்ட பொருட்களும் நியாய விலைக் கடைகளுக்கு கூட்டுறவுத் துறை வாகனங்கள் மூலம் நகர்வு செய்யப்படுகிறது. விடுதிகள் / சத்துணவு போன்றவற்றிற்கு அரிசி / கோதுமை FCIயிடமிருந்து பெறப்படுகிறது.

மேலும், மாவட்ட ஆதிதிராவிடர் நல துறை, வேளாண்மை பொறியியல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மின்சாரத் துறை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்களில் கோரிக்கை மனுக்கள் வழங்கிய 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் மதிப்பிலான அரசு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயிலும் சுமார் 3.28 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை 34 சதவீதம் உயர்ந்துள்ளது. புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 16,842 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 1928 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக தொடங்கி வைக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் தருமபுரி மாவட்டத்தில் 2784 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவர் வழியில் நல்லாட்சி செலுத்தும் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 2ம் கட்டம் ரூபாய் 7 ஆயிரத்து 890 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்து, இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூலம் தருமபுரி மாவட்டத்திலுள்ள 2828 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட உள்ளது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயணச்சலுகைகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். இதன் மூலம் இன்றும் மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். தருமபுரி மாவட்டத்தில் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 7033 மாணவர்கள் பயன்பெற உள்ளனர்.

இத்தகைய முன்னோடி திட்டங்களின் மூலம் மாணவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 9583 வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மழை காலத்தில் பழுதடைந்த சாலைகள் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் மலையூர்காடு, ஏர்ரபட்டி, கம்பைநல்லூர் இரமத்தூர் சாலை, செம்மனஹள்ளி மூலக்காடு சாலை, பைரநத்தம் கதிர்புரம் சாலை, சின்னங்குப்பம் முதல் ஜம்மனஹள்ளி சாலை, பென்னாகரம் பெரும்பாலை சாலை உள்ளிட்ட 23 சாலைகள் ரூ.5 கோடியே 93 இலட்சம் மதிப்பிலும் 2 சாலை மேம்பாலங்கள் ரூ.4 கோடியே 43 இலட்சம் மதிப்பில் பணிகள் துவக்கபட உள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர். எஸ்.பி.வெங்கடேஷ்வரன், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி. கே. மணி, மாவட்ட வருவாய் அலுவலர் செ.பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இரா.காயத்ரி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ. சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.என்.பி.இன்பசேகரன், நகர்மன்ற தலைவர் இலட்சுமி மாது, மாநில கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகா தேவி, மாவட்ட வழங்கல் அலுவலர் செம்மலை, நல்லம்பள்ளி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.மகேஸ்வரி பெரியசாமி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திருமதி.அ.ச.மாது சண்முகம், ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி. கவிதா முருகன், வட்டாட்சியர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி, விராலிமலை மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் அ.இளங்குமரன் வரவேற்பில், ஒன்றிய அவைத்தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையில் விராலிமலை கமலா பாலா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக விவசாய தொழிலாளர் அணி துணைத்தலைவர் த.சந்திரசேகர், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளரும் புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கை.பழனிச்சாமி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர். ஸ்டாலின், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.சபாபதி, ஒன்றிய கழக மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஏ.பி.ஆர். ராஜாங்கம், சிவா, ரவி, கணேசன், ராஜா, மூக்கையா, வீராச்சாமி, கோமதி,செல்வம், நா.சி.பழனிச்சாமி கண்ணன், என்.எஸ்.கே. நல்லதம்பி, உள்ளிட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக பொது உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

### கல்வி மறுத்த சனாதனம்!

# கல்வியைக் கொடுத்த வெள்ளையர்கள்!

**பள்ளிக் கல்வித் துறையில் மாணவர்களிடையே நச்சுக் கருத்துப் பரப்பிய பாதகனை தட்டிக்கேட்ட ஆசிரியர்...!**

16ஆம் நூற்றாண்டில் இருந்துதான் பொதுக்கல்வி முறை பிராமணரல்லாத மக்களுக்கு தமிழ்நாட்டில் முதன் முதலாக சாத்தியமானது. அதே காலத்தில்தான் தமிழ் அகராதிகள் எழுதும் முயற்சிகள், அச்சு நூல்களை உருவாக்கும் முயற்சிகள், உரை நடைகளை உருவாக்கும் முயற்சிகளும் உருவானது. தெற்கில் தொடங்கிய இந்த முயற்சி அரசியல் குழப்பம், போர் காரணமான இடை நின்று போனது. வெகுசன மக்களுக்கு அது எட்டாமல் போனது.

நீண்ட நெடுங்காலம் பிராமணர் ஆதிக்கத்திற்குட்பட்டு கிடந்த சமூகத்தில் பிராமணரல்லாதோர் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்த நிலை மாற வேண்டும் என பிரமாணரல்லாத உயர் வகுப்பினரில் சிலர் சிந்தித்தனர். பிரிட்டீஷார் ஆட்சி என்றாலும் அவர்களின் அதிகாரங்களை செயல்படுத்தும் இடத்தில் பிராமணர்களே இருந்தனர். பிரமணரல்லாத உயர்சாதி நாயர், செட்டியார், வெள்ளாளர், ரெட்டியார், முதலி இவர்களுடன் கத்தோலிக்கர், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் என கல்வி கற்ற ஒரு குழுவினர் இருந்த போதும் அவர்களால் எந்த அதிகாரத்துக்குள்ளும் நுழைய முடியவில்லை.

1895 ஃபேபிளே (Fairplay) என்ற வெள்ளை அதிகாரி சென்னை ஆளுநர் வென்லாக்கிற்கு திறந்த கடிதங்களை எழுதுகிறார். அதில் “ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டாலும் உண்மையில் பிரமாணர்கள்தான் இந்தியாவை ஆட்சி செய்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் பிராமணர் நலன்களையே பிரதிபலிக்கிறது. இந்திய அரசுப்பணிகள் மக்கள் தொகை விழுக்காட்டிற்கு ஏற்ப பிரமாணரல்லாத மக்களுக்கும் வாய்ப்பு வழங்கவேண்டும்” இதுதான் சனாதனத்தின் மீது வீசப்பட்ட முதல் கல்.

இதில் நமது கல்வியை சனாதன குருகுலக் கல்வியோடு ஒப்பிடும் போது நவீனமயமாக்கிய மெக்காலே பற்றி தனியாக எழுத வேண்டும். இந்திய நவீன கல்வியின் தந்தை மெக்காலே அவர் அங்கீகரிக்கப்படாமல் போக பல காரணங்கள். இந்தியர்களின் எண்ணங்களை மாற்றியமைத்து ஆங்கிலக் கல்வியையும் மேற்கத்திய சிந்தனை முறையும் இந்தியர்களுக்கு பயிற்றுவிக்க முயன்றார். அது கடினமான வார்த்தைகளுடன் இருந்தால் கூட இந்த் நாட்டின் அடிமைப்பட்ட மக்கள் மீது மெக்காலே கொண்டிருந்த பற்று எத்தனை உயர்வானது. அவரது எண்ணங்கள் ஈடேறியிருந்தால் இந்தியாவில் பட்டியலின, விளிமு நிலை மக்கள் தொட முடியா உயரத்தை சென்ற நூற்றாண்டிலேயே அடைந்திருப்பார்கள். மூட நம்பிக்கை, புராணக்கதைகள், கிறிஸ்தவ ஆதிக்கம், மதத்தை கல்வியில் இருந்து விலக்கி வைத்தல் என்பதோடு சமஸ்கிருதம், அரபி, பார்சி மொழிகளை கல்விக்குள் இருந்து அகற்ற வேண்டும் எனக் கருதினார். அவரது தெரிவு ஆங்கிலம் மட்டுமே.. வகுப்பறையில் சாதி வேற்றுமைக்காக ஆசிரியர்களையே தண்டித்த மாமனிதன் மெக்காலே.





கல்வி இப்படித்தான் நமக்கு வெள்ளையர்களால் கிடைத்தது.

சரி, இந்த சிந்தனைகள் எப்படி அரசியல் இயக்கம் ஆனது?

இன்று நாம் 50 சதத்துக்கு மேல் உயர்கல்வியில் சாதிக்கிறோம். நிச்சயம் இந்தக் குரல்கள்தான் பின்னர் திராவிட இயக்கமாக ஆக்கம் பெற காரணமானது. அன்றைய ஃபேபிளேவின் கடிதமும் இன்று திமுகவும் நடத்தும் கல்விக்கான போராட்டம் வேறு வேறு அல்ல.

1909 -ல் பிராமணரல்லாதவர்கள் சங்கம்

1912-ல் சென்னை ஐக்கிய சங்கம் (பின்னர் திராவிடர் சங்கமானது)

1916 நீதிக்கட்சி என பெருமளவு விழிப்புணர்வு பெற்ற சென்னையைச் சுற்றியுள்ள 30 பிராமணரல்லாத செல்வாக்கு மிக்கவர்களால் உருவானது அதுவே பின்னாளில் திராவிடர் கழகம், திமுக என்று பெரும் நிலப்பரப்பில் நின்று ஜீவிக்கிறது,.

சங்கரன் நாயர், நடேச முதலியார், பி.டி தியாகராயர், டி.எம். நாயர்.கருணாகர மேனன், திரு.வி.க. என 30 ஆளுமைகள் வேலைவாய்ப்பு, கல்வி, சமூக நீதிக்கான முதல் குரலை சென்னையில் உருவாக்கினார்கள். 1930களில் அவர்கள் ஆட்சிக்கு வரும் அளவுக்கு செல்வாக்கோடு இருந்தார்கள். அந்த செல்வாக்குக்கு காரணம் அவர்கள் மக்களுக்காக உழைத்தார்கள்.

1922-ல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் 50 சதவீதத்தை பிராமணரல்லாதவர்களுக்கு வழங்க வேண்டும் என ஒரு தெரிவுக்குழுவை உருவாக்கும் அளவுக்கு தங்களை உயர்த்திக் கொண்டார்கள்.

இந்த புள்ளியில் இருந்துதான் பெரியார், அண்ணா, கலைஞர், என வெகுசன தலைவர்கள் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் தலைவர்களாக உருவாகிறார்கள். இன்று அதன் தொடர்ச்சியாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுமாக இந்த சங்கிலி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**டி.அருள் எழிலன்**
பத்திரிக்கையாளர்